**வாரியபொல பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வாரியபொல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, வாரியபொல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் வாரியபொல புதிய வர்த்தகக் கட்டிடத் தொகுதிக்கு மின்சாரம் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 14,864,533 இற்கான செலவினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | 2024 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் மோட்டார் வாகனம் மற்றும் வண்டிகள் கணக்கின் மீதி ரூபா 3,500,000 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு சபைக்குச் சொந்தமான பெக்கோ லோடரின் பெறுமதி ரூபா 6,120,000 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவில் தீர்க்கப்படாதிருந்த ரூபா 362,000 தொகை பெறுமதியான 06 நிர்மாண வேலை வைப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் தீர்க்கப்படாமல் வைப்புக்கள் என காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | வைப்புக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | சபைக்குச் சொந்தமான பாதெனிய இளைப்பாறும் நிலையத்தின் பெறுமதி ரூபா 489,617 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணங்காமைகள் | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டம் | | | |
| | பிரிவு 134 | சபையினால் சேவை வழங்கும் முன்னேற்றமடைந்த கிராமப் பிரதேசங்களை வெளியிடுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | பிரிவிற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நிதிப் பிரமாணங்கள் 570 மற்றும் 571 | ரூபா 1,923,120 தொகை பெறுமதியான காலவதியாகிய 36 வைப்புக்கள் பிரமாணங்களுக்கு இணங்க ஆதவழிப்புச் செய்திருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | பொது நிருவாகச் சுற்றறிக்கைகள் 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கம் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரிவு 3 | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி எதிர்பார்த்த விளைவுகளை நெருங்கிக் கொள்வதற்காக பதவியணியிடம் காணப்படக்கூடிய திறன்களை தெளிவாக இணங்கான வேண்டியதுடன், அதற்காக செய்முறையொன்று காணப்பட வேண்டும் என சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்டவாறு செயற்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சுற்றறிக்கை இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | உள்ளூராட்சி சுற்றறிக்கைகள் | | | |
| (i) | 2010 ஜூலை 30 திகதிய 2010/02 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரிவு 1.2 | கடமைகள் மேற்கொள்ளும் போது விடயங்களை மாற்றும் முறைமை ஒன்று மற்றும் அவ்வாறு மேற்கொள்ளல் வசதியீனமான உத்தியோகத்தர்களுக்காக 02 வருடங்களுக்கு ஒருமுறை பிரிவுகளை மாற்றும் முறையொன்று செயற்படுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்படுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | இலக்கம் 03/2015 மற்றும் 2015/11/02 திகதிய சுற்றறிக்கை | வீதி விளக்குகள் பதிவேடு நாளதுவரையாக பேணிச் சென்றிருக்கவில்லை. | - மேற்படி - | மேற்படி - |
| (உ) | 1990 இன் 12 இலக்க வடமத்திய மாகாண சுற்றாடல் பணியாணை பிரிவு 10 | 2023 ஆண்டிற்காக 10 நிறுவனங்களினால் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளாமையால் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டண வருமானத்தை இழந்திருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | சட்டங்கள் விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | பிரதேச சபைகள் நிதி மற்றும் நிருவாக விதிகள் | | | |
| (i) | விதி 61 | வருடாந்த கணிப்பீடொன்று மேற்கொண்டு பெற்றுக்கொண்ட பட்டியலில் அடங்கியுள்ள அனைத்து கைத்தொழில்கள், கைத்தொழில் வரி தொடர்பான வரி உட்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், வரி செலுத்தும் வியாபாரங்கள் மாத்திரம் பதிவேட்டில் உட்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. வரி செலுத்தப்படாத கைத்தொழில்கள் தொடர்பான பதிவேட்டில் உட்படுத்தப்படாததுடன், அது தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | விதிக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | விதி 218 | நியமனம் செய்யப்பட்ட சபையொன்றினால் வருடாந்த காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவை | | | |
| | வழிகாட்டல் 4.2.1(ஆ) | குறைந்த அளவு மூன்று வருடங்கள் (03) காலத்திற்காக எதிர்பார்த்த பெறுகை அலுவல்கள் பட்டியல் படுத்தியிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையில் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 13,135,390 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 14,431,413 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | | ஆண்டு 2023 மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | ஆண்டு 2022 மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| i. | வீதவரி மற்றும் வரி | 10,424 | 9,128 | 6,874 | 2,254 | 10,330 | 9,063 | 6,162 | 2,901 |
| ii. | வாடகை | 31,462 | 13,345 | 13,204 | 140 | 16,375 | 9,738 | 9,737 | 469 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,205 | 2,348 | 2,348 | - | 1,676 | 2,091 | 2,090 | - |
| iv. | ஏனைய வருமானங்கள் | 134,540 | 50,656 | 131,158 | (80,502) | 143,665 | 872,147 | 16,275 | 973 |
| | மொத்தம் | 178,631 | 75,477 | 153,584 | (78,108) | 172,046 | 893,039 | 34,264 | 4,343 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வீதவரியின் பெறுமதியாகிய ரூபா 4,609,534 தொகையில் 51 சதவீதம் கடந்த ஆண்டுகளுக்கான நிலுவைத் தொகையாகும். சபைக்கு வீதவரி அறவீடு செய்யும் மொத்த அலகுகளின் எண்ணிக்கை 4698 இல் 1885 அலகுகளிலிருந்து வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | நிலுவை மீதிகளை அறவீடு செய்வற்காக போதியளவு வேலைத்திட்டமொன்று தயாரித்து நிலுவை மீதிகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 5,507,720 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு தொடர்பாக ரூபா 28,500,000 தொகை மற்றும் 2022 ஆண்டு தொடர்பாக ரூபா 19,042,443 தொகை என கூட்டுத்தொகை ரூபா 47,542,443 தொகைக்கான முத்திரைக் கட்டணப் பெறுமதியொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | நிலுவை மீதிகளை தருவித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக மூலதனச் செலவு ரூபா 57,610 தொகை மற்றும் மீண்டுவரும் செலவு ரூபா 25,015,604 தொகை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், குப்பை விற்பனையின் மூலம் கிடைத்திருந்த வருமானம் ரூபா 534,044 தொகையாக காணப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | உக்கக்கூடிய மற்றும் உக்காத குப்பைகளை உரிய முறையில் முகாமைத்துவம் செய்து வருமானம் உருவாக்கும் அலுவல்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 09 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 91,161,023 தொகையாக காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | சபைக்கு அறவிடப்பட வேண்டிய மீதிகளை விரைவாக அறவிட வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான உயிர்வாயு அலகு 2021 ஆண்டின் பின்னர் செயற்படாத நிலையில் காணப்பட்டதுடன், அந்த அலகினை திருத்த வேலை மேற்கொண்டு ஆக்கபூர்வமாக பயன்படுத்துவற்காக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | வளங்கள் உச்ச மட்டத்தில் பயன்படுத்த வேண்டும். |
| (இ) | சாக்கடை வண்டியின் மூலம் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தல் சபைக்கு உரிமையில்லாத தனியார் காணியொன்றில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தக் காணியின் உரிமையாளரினால் மலக் கழிவுப்பொருள் மீள்சுழற்சி அலகொன்று நிறுவுவதற்காக காணியை வழங்குவதற்காக 2016/09/28 திகதி சத்தியக் கூற்றொன்றின் மூலம் இணக்கம் தெரிவித்திருந்தமையால் காணியில் கழிவுப் பொருட்கள் அப்புறப்படுத்தல் மேற்கொள்ளப்படுவதென அவதானிக்கப்பட்டதுடன், மலக் கழிவுப் பொருட்கள் அப்புறப்படுத்தும் போது அவை மண்ணோடு மற்றும் நிலக் கீழ் நீருடன் சேருவதை தவிர்ப்பதற்காக | - மேற்படி - | கழிவுப் பொருட்கள் அப்புறப்படுத்தல் சுற்றாடல் நேயத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |

பரிகாரம் (Treatment) மேற்கொள்ளப்படுவது என அல்லது மலக் கழிவுப் பொருள் மீள்சுழற்சி அலகொன்று முறைப் பிரகாரம் நடாத்திச் செல்லப்படுகின்றது என உறுதிப்படுத்தப்படவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணிகள், கட்டிடங்கள் மற்றும் வாகனங்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணிச் சென்றிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் பராமரிக்கப்படுகின்ற அனைத்து மின்விளக்குத் தூண்களில் இலக்கமிடப்பட்டு அதன் தகவல்கள் அடங்கிய பதிவேடொன்று நாளதுவரையாக பேணிச் செல்லப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு நாளதுவரையாக பேணிச் செல்லப்பட்ட பதிவேடொன்று காணப்படவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | ரூபா 2,635,000 தொகை பெறுமதியான 05 காணிகள் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | முறைப் பிரகாரம் கணிப்பீடொன்று மேற்கொண்டு சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் மற்றும் மயானங்களை இனங்காண்பதற்கு அவற்றின் பௌதீக உளமையை உறுதிப்படுத்துவதற்காக எல்லை வேலிகள் போடுவதற்கும் உரிய முறையில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | அனைத்துக் காணிச் சொத்துக்களின் பௌதீக உளமை பாதுகாக்கப்பட வேண்டும். |
| (உ) | குழாய்க் கினறுகள் மற்றும் பொதுக் கினறுகள் அமைத்தல், பொறுப்பு மற்றும் அவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக முறையான கணிப்பீடொன்று கால ரீதியாக மேற்கொள்ளப்பட்டு நாளதுவரையான தகவல்கள் அடங்கிய பதிவேடொன்று சபையினால் பேணிச் சென்றிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | சபைக்குச் உரித்தாக்கப்படாத 114 காணிகள், கட்டிடங்கள் சொத்துக்கள் காணப்பட்டன. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | அனைத்துக் காணிச் சொத்துக்களின் பௌதீக உளமை பாதுகாக்கப்பட வேண்டும். |
| (எ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 329 பொது கினறுகள் காணப்பட்ட போதிலும், சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த பொது கினறுகளின் எண்ணிக்கை 85 மாத்திரமே. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | உரிமையை உரித்தாக்கியிருக்காத காணியொன்றில் சபையினால் செலவு மேற்கொள்ளப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த பாதனிய இளைப்பாறும் கட்டிடத்திற்காக சபையினால் மீளாய்வாண்டின் போது குத்தகை ரூபா 431,750 தொகையும் ஏனைய செலவுகள் ரூபா 127,000 தொகை செலவும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மிகைத்திருந்த எண்ணிக்கை 54 ஆகும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | பதவியணித் தேவைப்பாட்டினை கால ரீதியாக மீளாய்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மிகைத்து அமைய, பிரதியீட்டு, ஒப்பந்த அல்லது நாளாந்த சம்பள அடிப்படையின் கீழ் சேர்க்கப்பட்டிருந்த 16 ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகள் என ரூபா 712,800 தொகை செலுத்தப்பட்டிருந்தன. | - மேற்படி - | - மேற்படி - |

### 3.5 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாதனிய இளைப்பாறும் நிலைய 08 கடையறைகள், கடுபொத பல்கரும கட்டிடத்தின் 15 கடையறைகள் மற்றும் வாரியபொல புதிய வர்த்தக கட்டிடத்தொகுதி விளைவற்று காணப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | விளைவற்ற சொத்துக்களை செயற்படு நிலைக்கு மாற்ற வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் மீளாய்வாண்டிற்காக நிறைவேற்றப்பட வேண்டிய கருமங்கள் அடங்கிய செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அங்கு இனங்காணப்பட்டிருந்த 81 விஷேட சுட்டிகள் தொடர்பாக ஆண்டின் போது எதுவித முன்னேற்றத்தையும் அடைந்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | திட்டங்களை வெற்றிகரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டு அதன் கடமைகளுக்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த உத்தியோகத்தருக்கு உள்ளகக் கணக்காய்விற்கு மேலதிகமாக ஏனைய கடமைகளும் சாட்டப்பட்டிருந்தமையால் போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | சபையின் அலுவல்கள் தொடர்பாக பொருத்தமான மற்றும் போதியளவு கணக்காய்வொன்று மேற்கொள்ள வேண்டும். |

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 வருமான விடயங்களில் மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் இடையே 25 சதவீதம் முதல் 77 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டதுடன், 05 செலவு விடயங்களில் மதிப்பீட்டு செயற்பாடுகள் மற்றும் உள்ளவாறான செலவுகள் இடையே 30 சதவீதத்தை விட கூடிய முரண்கள் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | வருமானம் மற்றும் செலவுகள் யதார்த்தமாக முகாமைத்துவம் செய்ய வேண்டும். |